[8th December 1961

Public Works (Central Aid)

* 2168 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959 முதல் 1961 மார்ச்சு 31 வரையில் நமது ராஜ்யத்துக்கு Public Works இலாகாவுக்கு நீர்ப்பாசனம், கட்டட வேலை முதலியவைகளுக்காக மத்திய சர்க்கார் மானியம் எவ்வளவு ஒதுக்கினார்கள்?

(இ) அதில் எவ்வளவு எந்தெந்த துறையில் செலவு செய்யப்பட்டது?

(உ) பூராவும் செலவு செய்யாமல் விட்டதற்கான காரணமென்ன?

THE HON. SRI P. KAKKAN: (அ) The Government of India do not allocate any sums for buildings as such; the allocation is determined by the State Government as part of the overall plan provision for each Department. The allocation made by the Government of India for Irrigation Projects is Rs. 138·13 lakhs for 1959–60 and Rs. 165.04 lakhs for 1960–61.

(இ) A sum of Rs. 374 lakhs during 1959–60 and a sum of Rs. 361 lakhs during 1960–61 were spent on Irrigation Projects.

(உ) The amounts spent on Irrigation Projects have exceeded the allotments during 1959–60 and 1960–61.

SRI V. K. KOTHANDARAMAN: நீர்ப்பாசன வசதி மிகவும் பின்தங்கி இருக்கக்கூடிய நேரத்திலே இந்த அளவுக்கு சரியான முறையிலே பயன்படுத்தாமல் விட்டுவிட்டிருப்பது சரியா? இப்படிச் செய்வதன் மூலம் உணவு உற்பத்தி தடைப்படுகிறது அல்லவா?

THE HON. SRI P. KAKKAN: நான் சொன்ன பதிலை கனம் அங்கத்தினர் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். 1959-60, 1960-61-ல் அலாட்மென்டுக்கு மேலாகவே செலவு செய்து இருக்கிறோம்.

Cuddalore Port

* 2169 *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of Sri N. K. PALANISAMI): Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to improve the Cuddalore Port for navigation purposes; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes, Sir.

(*b*) The proposal is for stabilising the bar at the mouth of Paravanar so as to keep a bar channel of 9·00 feet deep.